LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA.

# Eastern University, Sri Lanka

## Faculty of Commerce and Management

## External Degree

## Part III Examination in Business Administration -2008/2009 (May / June 2013)

## (Proper/Repeat)

## EXB 406 Research Methodology

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம்: 03 மணித்தியாலங்கள்

1. (a) ஆய்வு எனும் பதத்தினை நீங்கள் எவ்வாறு வரைவிலக்கணம் செய்வீர்கள்?

(b) கட்டுப்படுத்துவதாக இருத்தல் (Controlled) சிறந்த ஆய்வின் ஒன்றின் பண்புகளில் ஒன்றாகும். விளக்குக.

(c) விபரண ஆய்வு (Descriptive Research) ஒன்றின் குணாதிசயங்கள் யாவை?

(d) பின்வரும் ஆய்வுத் தலைப்புகள் எவ்வகையைச் சார்ந்து என அடையாளம் காண்க:

(i) ஊழியர்களின் செயற்பாட்டின் மீது அவர்களது தொழில் மனப்பாங்கு ஏற்படுத்தும் தாக்கம்.

(ii) ஊழியர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான ஊழியர் பயிற்சியின் வினைத்திறன்.

(iii) வங்கி முகாமையாளர்களின் தலைமைத்துவ பாணிகள்

(iv) நிறுவனங்களின் விற்பனையை அதிகரிப்பதில் விளம்பரங்களின் பங்களிப்பு.

(v) முகாமையாளர்களின் மனஅழுத்தம் நிறுவன செயற்பாட்டில் ஏற்படுத்தும் விளைவுகள்.

(20 புள்ளிகள்)

2. (a) ஆய்வுப் பிரச்சினைனையை முகாமைத்துவ பிரச்சினையிலிருந்து வேறுபடுத்திக் காட்டி விளக்குக.

(b) ஆய்வுப் பிரச்சினை ஒன்றை அடையாளம் காணும் போது நூலாய்வின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(c) ஆய்வு ஒன்றில் எண்ணக்கருக்களை நடைமுறையாக்கம் செய்வதன் நோக்கம் என்னவென விளக்குக.

(d) வியாபார நிறுவனங்களில் ஊழியர்களின் தொழில் திருப்தியை அதிகரிப்பதில் பல்வேறு வகையில் இணைந்தவாறு நிதிசார் ஊக்குவிப்புத் திட்டங்களும் நிதிசாரா ஊக்குவிப்புத் திட்டங்களும் எவ்வாறு பங்களிப்புச் செலுத்துகின்றன என்பதனை ஆய்வு செய்ய நீங்கள் விரும்புவதாகக் கருதுக. இதனைப் பரீட்சிப்பதற்கு பொருத்தமான கருதுகோள்களை நிறுவுக.

(20 புள்ளிகள்)

3. (a) ஆய்வு வடிவமைப்பின் (Research Design) இரு பிரதான தொழிற்பாடுகளையும் விளக்குக.

(b) அரச நிறுவனங்களில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கு நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கும் முகாமைத்துவ பயிற்சித் திட்டம் ஒன்று அவர்களது முகாமைத்துவ திறனை விருத்தி செய்வதில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை ஆய்வு செய்ய பொருத்தமான ஆய்வமைப்பு (Study Design) ஒன்றினை சிபாரிசு செய்து அதனை வரைபட உதவியுடன் விளக்குக.

(c) நீண்டகால ஆய்வு வடிவமைப்பு (Longitudinal Study Design) எவ்வகையான ஆய்வுப் பிரச்சினைகளுக்கு பொருத்தமானதாக அமையும் என ஆராய்க.

(d) பரீட்சித்தல் ஆய்வு வடிமைப்பு (Experimental Study Design) எவ்வாறு அமைக்கப்படுகின்றது என்பதை விளக்குக.

(20 புள்ளிகள்)

LIBRARY
23 AUG 2013

4. (a) நம்பகத்தன்மை (Reliability) மற்றும் உறுதித்தன்மை (Validity) என்னும் பதங்களை விளக்குக.

(b) கட்டமைக்கப்படாத நேர்காணல் மூலம் தரவு திரட்டும் முறைகள் இரண்டினை விளக்குக.

(c) வினாக்கொத்து மூலம் தரவுகள் திரட்டுவது மிகவும் பொருத்தமற்றதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களை ஆராய்க.

(d) மாறிகளை அளவிடும் நான்கு வகையான அளவு கோல்களைப் (Measurement of Scales) பற்றி விபரிக்குக.

(20 புள்ளிகள்)

5. (a) குழுவாக்கப்பட்ட எழுமாற்று மாதிரியமைத்தல் (Stratified Random Sampling) முறைக்கும் தொகுதிமுறை மாதிரியமைத்தல் (Cluster Sampling) முறைக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக.

(b) முறைமையான மாதிரியமைத்தல் (Systematic Sampling) முறையினை விபரிக்குக.

(c) ஆய்வுகளில் தரவு முன்வைத்தல் முறைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(d) ஆய்வுகளில் விபரண புள்ளிவிபர பகுப்பாய்வின் பிரயோகத்தினை சுருக்கமாக விளக்குக.

(20 புள்ளிகள்)